ஆசிரியர்:

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் மஹாமஹோபாத்யாய பத்மவிபூஷண ஜகதாசார்ய

அண்ணங்கராசாரியர்

அபிநவ கோதாஸ்துதி

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் விஜ்ஞாபித்தது.

[ஒவ்வொரு சுலோகத்திலும் நான்காவது பாதம் "பட்ட முநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே!" என்று தொடர்ந்து வரும்.]

திருப்பாவையின் ஸாரங்கொண்ட சுலோகங்கள்-5

மார்க்கசிர ஆஹ்வய ஸுமாஸதிவஸாநாம் புண்யதமதாம் ஜகதி ஸம்யகவபோத்ய |
வேதஸமதிவ்யக்ருதி தாநகுசலே! ஸ்ரீ:! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! || 1

(பொழிப்புரை) மார்க்கசீர்ஷமென்கிற மாஸத்தின் முப்பதுநாள்களும் மிகப் புனிதமானவை யென்னுமிடத்தை உலகுக்கு நன்கு தெரிவித்து வேதத்தோடொத்த திவ்யப்ரபந்தத்தை யருளிச்செய்தவளே! பிராட்டியே! பெரியாழ்வார் திருமகளாரான ஆண்டாளே! நித்யமுமிங்கு வாழ்க. 2

....

கோகுலவதூஜநவிபோதநமிஷேண ஸ்ரீபதி பதாப்ஜநதபக்தமஹிமாநம் |
ஸ்பஷ்டமவபோதிதவதி! ப்ரணயபூர்ணே! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! || *

(திருப்பாவையில் *புள்ளும் சிலம்பினகாண்* என்கிற ஆறுவதுபாசுரம்முதல் *எல்லே இளங்கிளியே!* என்கிற பதினைந்தாம்பாசுரமளவாகத்) திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகளை யெழுப்பும் வியாஜத்தினால் (அப்பாசுரங்களிலுள்ள சொற்றொடர்களினால்) திருமாலடியார்களின் பெருமையை நன்கு விளக்கினவளே! பக்தி நிறைந்தவளே! வாழி வாழி. திருப்பாவைப் பாசுரங்களின் உள்ளுறைபொருளை முக்கியமாகக் கொண்டு இவ்வினை பேசப்பட்டது. நமது *திருப்பாவை நறுமணமென்னும் உரையில் விரிவுகாண்க.) ... *

த்வாரபதிபோதநபுரஸ்ஸரம், உதாரம் நந்தமத தத்ப்ரணயிநீமபி யசோதாம் |
க்ருஷ்ணஹலினாவபி ச போதிதவதி! ஸ்ரீ:! பட்டமுகிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! । 3

நந்தகோபனுடைய கோயில் காப்பானை யெழுப்பி, வள்ளலான நந்தகோபனையும் அவன்தன் தேவியான யசோதைப்பிராட்டியையும் கண்ணபிரானையும் நம்பிமூத்தபிரானையுமெழுப்பின நாச்சியாரே! வாழ்க ... ... *

ஸப்தஸ்வஸ்ருஸ்தநப்ரதலனோ வ்ருதாநீளாம் தத்ருச கிரீந்த்ரதடஸாம்ப்ரதமபி க்ருஷ்ணம் |
போதிதவதி! ப்ரணயஸாரபரிபூர்ணே! பட்டமுகிபுத்ரி ஜய நித்யமிஹ கோதே! । 4

எருதேழடர்த்து மணந்த நப்பின்னைப்பிராட்டியையும் அவளுடையதிருமுலைத்தடத்திலே வைத்துக்கிடந்த மலர்மார்பனான கண்ணபிரானையுமுணர்த்தினவளே! அன்புமிக்க நாச்சியாரே வாழி. ... ... *

கோபவதூசரிதாநுவ்ரத விசேஷவ்யாநுகரணேந பகவந்த முபஸ்ருப்ய |
ப்ரார்த்தித கிங்கரமஹிஷ்ட விபவஸ்யே! பட்டமுகிபுத்ரி ஜய நித்யமிஹ கோதே! । 5

ஆய்ச்சிகளனுஷ்டித்த நோன்பின்பெருமையை அநுகரித்துக் கண்ணபிரானையடைந்து *உன்றன்னோடுற்றோமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோம்* என்று நித்ய கைங்கர்ய ப்ரார்த்தனை பண்ணித் தலைக்கட்டின நாச்சியாரே! வாழி. ... ... *

திருப்பாவை அநுபவம் முற்றிற்று

(இனி நாச்சியார் திருமொழியநுபவ விசேஷ ச்லோகங்கள்)

கோபவதூசரிதக்ருத்யமநுக்ருத்யாப்யச்யுத ஸமாகமமலப்யாக்யபிஸ்ரீநேண |
பூய இஹ பூரிகுணபோகருசிபூர்ணே! பட்டமுகிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே । 6

ஆய்ச்சியர் அநுஷ்டித்தக்ருத்ய விசேஷத்தை அநுகரித்தும் கண்ணபிரானோடு சேர்ந்து களிக்கும் பாக்யம் கிடைக்காமையினாலே மேலும் பல குணவிசேஷங்களை அநுபவிக்க விரும்பி நின்று திருமொழியருளிச்செய்த நாச்சியாரே! வாழ்க. ... ... *

(தையொரு திங்களும்)

கேசவமநாம்புருஹைக்யமரிசர்ப்ப கௌதுகபரேண க்ருதபஞ்சசரஸேவே! |
ஸுராந்திகநறுத்திரணபூரிதமனஸ்கே! பட்டமுகிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! । 7

*தையொரு திங்களுமென்கிற முதல் திருமொழியில் *காமதேவா! கேசவநம்பியைக் கால்பிடிப்பாளென்னு மிப்பேறெனக்கருள்கண்டாய்* என்று கண்ணபிரானுடைய திருவடி வருடும்பேறு விரத்திக்கவேணுமென்று மன்மதனை வணங்கின நாச்சியாரே! வாழ்க. .... *

காமஜநகம் பரமபக்தி பரிதாபம் கேசிதமிதி ஸ்திதம் அதாபி பலக்ருஷ்ட்யா |
ஸாநுசிதமித்யமலகிர்ணயதஸ்ஸ்சிக்தே! பட்டமுகிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! । 8

காமதேவன் தேவதாந்தரமாகையாலே பரமைகாந்திகளுக்கு தேவதாந்தர பஜநம் கூடாதாகையாலே பெரியாழ்வார் திருமகளாரான ஆண்டாள் காமஸமாச்ரயணம் பண்ணுவது தகுதியன்று—என்னவேண்டியிருக்கும். ஆனாலும் ஆண்டாள் பரமபுருஷார்த்தமான பகவத் கைங்கர்யமாகிற பலத்தை யுத்தேசித்துச் செய்கையாலே கூடாமையில்லை— என்கிற கிரவத்ய மான ஸித்தாந்தத்தைத் தரும் ஸ்ரீ ஸூக்தியையுடைய நாச்சியாரே! வாழ்க. ஸ்ரீராமாயணத்தில் *ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விநீ;* என்றது காண்க. ஸ்ரீவசன பூஷணத்தில் "ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்" இத்யாதி சூர்ணைகளின் வியாக்கியானம் ஸேவிப்பது .... *

ஹேதிபதிசங்கதரபூருஷவரார்ஹம் மாமகபயோதரயுகம் ந பரயோக்யம் |
இத்தமவதாரிதவதி! ப்ரணயஸிந்தோ! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! ॥ 9

ஊனிடையாழி சங்குத்தமர்க்கென்று உன்னித்தெழுந்த வென்தடமுலைகள், மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே! என்றும், மேலே (12-4) *அங்கைத் தலத்திடையாழி கொண்டானவன் முகத்தன்றி விழியேனென்று, செங்கச்சுக் கொண்டு கண்ணாடையார்த்துச் சிறுமானிடவரைக் காணில் நாணுங் கொங்கைத்தலமிவை நோக்கிக் காணீர்! கோவிந்தனுக்கல்லால் வாயில் போகா* என்றுமுள்ள பாசுரங்களை நோக்கியது இந்த சுலோகம். ஆழியங்கையனான புருஷோத்தமனுக்கே உரிய என் தடமுலைகள் காபுருஷர்களுக்கு உரியனவாகமாட்டாவென்று ஆண்டாள் தன் உறுதியைச் சொல்லிக் கொண்டாளாயிற்று ....

(நாமமாயிரமேத்தநின்ற)

ஸைகதக்ருஹப்ரணயநப்ரவணகோபீ சித்தபரிதாபகரக்ருத்யநிரதஸ்ய |
நந்ததநயஸ்ய லகுசேஷ்டிதரஸஜ்ஞே! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! ॥ 10

ஸைகதக்ருஹப்ரணயநமாவது—சிற்றிலிழைத்தல். ஆங்காங்குச் சிறுவர் சிறுமியர்களின் விளையாட்டுக்களில் இஃது ஒன்று. திருவாய்ப்பாடியி லாய்ப்பெண்கள் தங்கள் பருவத்துக்குத் தக்கபடி சிற்றிலிழைத்துக் கொண்டிருக்க, அதுகண்ட கண்ணபிரான் 'நம்மைவிட்டு இப்பெண்கள் அந்யபரைகளாக இருப்பதென்!' என்கிற ரோஷத்தாலே அச்சிற்றிலையழிக்கப்புக, அப்படியழிக்கக்கூடாதென்று வேண்டின ஆய்ச்சிகளின் பாசுரமாகப் பாடின நாச்சியாரே! வாழ்க!

(கோழியழைப்பதன் முன்னம்)

குக்குடருதாத் புரத உத்திதவதூநாம் யாமுநஜலாசயவிகாஹநரதாநாம் |
வஸ்த்ரஹரணப்ரவணமாதவரஸஜ்ஞே! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! ॥ 11

கோழியழைப்பதன் முன்னமே யெழுந்து எமுனையாற்றின் ஒருபொய்கையிலே (க்ருஷ்ண விரஹதாபத்தீர) நீராடப்போன ஆய்ப்பெண்களைப் பின்சென்று (இருளிலே மறைந்திருந்து) அப்பெண்களின் ஆடையாபரணங்களைக் கவர்ந்த கண்ணன் குருந்தமரத்தின்மீது வீற்றிருக்கக்கண்ட ஆய்ச்சிகள் அவனைத் தொழுவதும் அழுவதுமாய் இரந்த செய்தியைப் பேசின நாச்சியாரே! வாழ்க.

(தெள்ளியார் பலர்)

நந்தஸூநுஸங்கமந பாக்யமிஹ சேந்மே ஸங்கமநதைவத! கடஸ்வ க்ருபயேதி |
கேலநரதவ்ரஜவதூஜநஸத்ருக்ஷே! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே!॥ 12

கூடலிழைத்தலென்பது பெண்களின் செயல்களில் ஒன்று, கூடல்தெய்வமென்று ஒரு தெய்வம், கண்ணைமூடிக்கொண்டு கீழே பலபல கோடுகளைக் கீறிவிட்டு, பிறகு கண்ணைத்

திறந்துகொண்டு அக்கோடுகளை எண்ணிப் பார்க்கையில் இரட்டைக்கோடாக முடிந்தால் இரண்டு பேராக [தம்பதிகளாக] வாழ்வோம் என்று மகிழ்வது; ஒற்றைக்கோடாக மிச்சப் பட்டால் நாம் தனியாக நின்று துவள்வோம் என்று வருந்துவது.........கூடல் தெய்வத்தை நோக்கி "எனக்கு எம்பெருமானோடு கூடும் பாக்கியம் வாய்க்குமானால் நீ கூடு" என்று சொல்லிக் கோடுகளைக் கீறுவது இந்த விளையாட்டின் தன்மை. இங்ஙன மாக விளையாடின ஆய்ச்சிகளை அநுகரித்த நாச்சியாரே! வாழ்க. ... *

(மன்னுபெரும்)

ப்ரேமபரிபோஷிதவநப்ரியமவேக்ஷ்ய த்வம் ஸபதி வேங்கடமஹீத்ரபதிமத்ர |
ஆகமய ஸங்கமய சேதி க்ருதவாக்யே! பட்டமுநிபுத்ரி! ஜயநித்யமிஹ கோதே! ॥ 13

ஆண்டாள், தன்னுடைய தோட்டத்தில் வளருங் குயிலைநோக்கி 'நீ ஏதோ கூவிக்கொண்டி ருக்கிறாய்; திருவேங்கடமுடையான் இங்குவந்து என்னோடு கூடும்படி கூவாய் என்றுரைத் தாள் இப்பதிகத்தில்; அந்த ஆண்டாளுக்கு வாழ்த்து, ... *

(வாரணமாயிரம்)

வாரணஸஹஸ்ரவ்ருதமச்யுதமநந்தம் ஸ்வப்நமுகத: பதிமவாப்ய பரிதுஷ்டே! |
மத்தகஜமஸ்தகநிஷண்ணபதியுக்தே! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! ॥ 14

கண்ணபிரான் ஆயிரம் யானைகள் [*தன்னேராயிரம் பிள்ளைகள்] சூழ வந்து தன்னை மணம் புணர்ந்ததாகவும், அவனோடுகூட யானையின்மீது வீற்றிருந்து ஊர்வலம் வந்ததாகவும் கனாக் கண்ட ஆண்டாளே வாழி. .... *

(கருப்பூரம் நாறுமோ)

நந்தஸுதவக்த்ரரஸஸௌரபவிசேஷம் ப்ரூஹி நநு பஞ்சஜநஜாத! மம த்ருப்த்யை |
இத்தமபிதாய பரிஹ்ருஷ்டஹ்ருதயே!ஸ்ரீ:! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! ॥ 15

இமே கண்ணபிரானோடு விளைந்த போகம் நனவன்றிக்கே கனவாக முடிந்ததற்கு வருந்தி மெய்யாகவே கண்ணனை யநுபவிக்கும் பாக்கியமுடையார் உளரோ? என்று ஆலோசிக் கையில் திருச்சங்காழ்வான் அந்த பாக்கியம் பெற்றவனென்று உணர்ந்து அவனோடு உசாவின நாச்சியாரே! வாழி. .... *

(விண்ணீலமேலாப்பு)

வ்யோமததமேசகவிதாநஸமமேகம் பாஷ்பபரிபூர்ணநயநேந ஸஹ வீக்ஷ்ய |
சேஷகிரிநாதவசநாய க்ருதயாச்ஞே! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! ॥ 16

விண்ணுலகில் நீலமேலாப்பு விரித்தாற்போன்று காட்சி தந்த கருமுகிலைக் கண்ணீர்கள் துளிசோரக் கண்டு, திருவேங்கடமுடையான் பக்கல் தூது செல்லுமாறு வேண்டின நாச்சியாரே! வாழி. .... *

(சிந்துரச்செம்பொடி)

ஸுந்தரபுஜாய சதபாண்டநவநீதம் ஸ்வாது மதுராந்நமபிசார்ப்பயிதுமாசாம் |
ப்ரோக்தவதி! பூதபுரயோகிஸஹஜாதே! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! ॥ 17

திருமாலிருஞ்சோலை நின்ற சுந்தரத்தோளுடையானுக்கு நூறு தடாவில் வெண்ணெயும், நூறுதடாநிறைந்த அக்காரவடிசிலும் வாய்நேர்ந்து பராவி வைத்துப் பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னுளென்று பேர்பெற்ற நாச்சியாரே! வாழி [ஸ்வாதுகலசாந்நம் என்னவு மாம்; =கலசமென்று க்ஷீரத்திற்குப்பெயர், *கலசஜலதிகந்யா* இத்யாதி காண்க.] .... *

(கார்க்கோடல் பூக்காள்)

வ்ருஷ்டிபல புல்லவநபுஷ்பததித்ருஷ்ட்யா கேதமதிமாத்ரமதிகத்ய ருதிதை: ஸ்வை: |
வ்ருக்ஷவிததேரபி ச ஸஞ்ஜநித கேதே! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹகோதே! || 18

*விண்ணீல மேலாப்புப்பதிகத்தில் திருமலையப்பன்பக்கல் தூது செல்லவேணுமென்று இரந்தாளன்றோ ஆண்டாள்; அந்த மேகங்கள் தூது செல்லாமல் நன்றாக வர்ஷிக்க, அதனால் காட்டுப் பூக்களெல்லாம் மலர்ந்தனவாக, அவை கண்ணபிரானுடைய திவ்யாவயவங்களுக்கு ஸ்மாரகங்களாய் நலிய, மிக வருந்திக் கதறி மரங்களையுமிரங்கச் செய்தாள் ஆண்டாள்; அவள் வாழ்க. .... *

(தாமுகக்கும் தங்கையில்)

பூமிதநயாதரணிருக்மிஸஹஜாஸு ஸ்ரீரமணஸாதித பரிச்ரமகதாபி : |
ஸ்வப்ரணய ரோஷமுபதர்சிதவதி/ஸ்ரீ:/ பட்டமுநிபுத்ரி/ ஜய நித்யமிஹ கோதே! || 19

*தாமுகக்கும் திருமொழியில் *உண்ணாதுறங்காது* என்கிற பாசுரத்தில் ஸீதாபிராட்டிக்காக அவன் பட்ட பரிச்ரமங்களையும், *பாசிதூர்த்துக்கிடந்த* என்கிற பாசுரத்தில் பூமிப்பிராட்டிக்காக அவன்பட்ட பரிச்ரமங்களையும், *கண்ணாலங் கோடித்து* என்கிற பாசுரத்தில் ருக்மிணிப் பிராட்டிக்காக அவன்பட்ட பரிச்ரமங்களையும் பேசி ப்ரணய ரோஷத்தைக் காட்டின நாச்சியாரே! வாழி. இந்த சுலோகத்தில் மூன்றாவது பாதத்தை *வ்யஞ்ஜித நிஜப்ரணய ரோஷபஹுமாநே!* என்பதாகவும் கொள்ளலாம். ப்ரணய ரோஷத்தை மட்டுமன்றிக்கே *பன்றியாந் தேசுடையதேவர்—பேசியிருப்பனகள்* என்று பெருமதிப்பையுங் காட்டியிருப்பது காண்க. .... *

ஸிந்துவ்ருதபூமிதலம் அம்பரதலம் தத் ஸுஷ்டு பரிபாலயதி ரங்கபுரநாதே |
அப்ரதிம பக்திபரபூஷிதமநஸ்கே! பட்டமுநிபுத்ரி ஜய நித்யமிஹகோதே! || 20

*பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ்சோராமே ஆள்கின்ற செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் பக்கல் சிறந்த பக்திகொண்ட நாச்சியாரே! வாழி.

(மற்றிருந்தீர்கட்கு)

திவ்யமதுராநகரமுக்க்யநவதேசாந் ப்ரோச்ய, நநு! மாம் நயத தத்ர ஸஹஸேதி |
ப்ரார்த்திதவதி! ப்ரசுர பக்திரஸசித்தே! பட்டமுநிபுத்ரி ஜய நித்யமிஹ கோதே || 21

வடமதுரை, திருவாய்ப்பாடி, நந்தகோபர்திருமாளிகை, எமுனைக்கரை, காளியன் பொய்கை, பக்தவிலோசனம், பாண்டிவடம், கோவர்த்தனம், துவராபதி—ஆகிய ஒன்பது இடங்களை யெடுத்துக்கூறி அங்கங்கெல்லாம் தன்னைக் கொண்டுபோய் விடும்படி உற்றாருறவினரை வேண்டின நாச்சியாரே! காதல் களஞ்சியமே! வாழி. .... *

(கண்ணனென்னுங்கருந்தெய்வம்)

க்ருஷ்ணகடிவஸ்த்ரம் அத தத்பதபராகம் வேணுஸுஷிரோத்தஜலபிந்துமபி தூர்ணம் |
ஆநயத ஹர்ஷயத சேதி க்ருதவாக்யே! பட்டமுநிபுத்ரி ஜய நித்யமிஹ கோதே! || 22

கண்ணனென்னுங் கருந்தெய்வத்தின் அரையில் பீதகவண்ணவாடையும் அடிப்பாட்டில் பொடியையும் அவனூதிவருகின்ற குழலின் துளைவாய் நீரையுங்கொணர்ந்து விரைவில் என்னைத் தேற்றுங்கோள்! என்று பணித்த நாச்சியாரே! வாழி வாழி. .... *

(பட்டிமேய்ந்து)

அக்ரஜஹலாயுதஸஹாய இஹ ப்ருந்தாரண்யபுவி வீக்ஷித இதீரிதவசோபி: |
அப்ரதிமஹர்ஷவிவசீக்ருதமநஸ்கே! பட்டமுநிபுத்ரி! ஜய நித்யமிஹ கோதே! || 23

நம்பி மூத்தபிரானுடன் செல்பவனை கண்ணபிரானை விருந்தாவனத்தே கண்டோமென்று பலகால் சொன்ன பேச்சுக்களாலே நிகரற்ற மகிழ்ச்சிகொண்டநாச்சியாரே! வாழி வாழி. *

துர்க்கடம்ருஷாவசநபாஷணபடீயாந் கிம் நநு முகுந்த இஹ த்ருஷ்ட இதி ப்ருஷ்ட்வா |
ஐகஷி யமுநாதட இதீரிதவசோபி: ஹ்ருஷ்டஹ்ருதயா ஜயது நித்யமிஹ கோதா || 24

*ஏலாப் பொய்களுரைக்க வல்ல கண்ணபிரானை இங்குக் கண்டாருண்டோ? என்று வினவி, எமுனையாற்றங்கரையில் விருந்தாவனத்தில் கண்டோமென்று சொன்ன சொற்களாலே திருவுள்ளமுகந்த நாச்சியார் நீடூழி வாழ்க. ... . *

மாதவமலிம்லுச முராரிரிஹப்ருந்தாரண்யபுவித்ருஷ்டஇதி பாஷணமிஷேண |
வ்யஞ்ஜிதமுகுந்தபரிரம்பரஸபோகே! பட்டமுநிபுத்ரி! ஜயநித்யமிஹகோதே! || 25

ஜாரசோரசிரோமணியான கண்ணனை விருந்தாவனத்தே கண்டோம் கண்டோம் என்று பாசுரமிட்டதனால் கண்ணபிரானோடு கூடியநுபவித்து மையல் தீர்ந்தபடியைத் தெரிவித்த நாச்சியாரே! வாழி. ... . ☼

தந்விநவ பத்தநஜபட்டமுநிபுத்ரீ–கீதக்ருதிரத்நயுகலார்த்தமவபோத்ய |
காஞ்ச்யுதிதவாதிபயக்ருத்குருகுலீநோ தாஸஇமமாஹமதுரம் ஸ்துதிநிபந்தம்! || 26

வில்லிபுதுவை விட்டுசித்தர் திருமகளார் அருளிச்செய்த இரண்டு திவ்யப்ரபந்தங்களின் மஹார்த்த ஸாரத்தை யுணர்த்தி ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதி பயங்கர ஸ்ரீ வைஷ்ணவதாஸன் இத்துதி நூலை பக்தபோக்யமாக இயற்றினன். .... *

அபிநவ கோதாஸ்துதி முற்றிற்று.